**C.C. No. 87/2021** **24.11.2023**

**DW**1 வள்ளி

<u>**எ.சா. 1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**</u>

1) நான் கொத்தமங்களத்தில் 14 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். திருமணமான நாளிலிருந்து 4 வருடம் சென்னையில் வசித்து வந்தோம். அதன் பின் என் தாயார் வீட்டில் கொத்தமங்களத்தில் கணவருடன் சேர்ந்து வசித்து வருகிறேன். முன்னர் சித்தாள் வேலைக்கு சென்று வந்தேன். தற்போது வீட்டில்தான் இருந்து வருகிறேன். என் கணவர் கொத்தனார் வேலை செய்து வருகிறார். சுற்றுவட்டாரத்தில் உள்ள ஊர்களில் நான் வேலைக்கு சென்றிருக்கிறேனா என்றால் இல்லை காரைக்குடியில் மட்டும்தான் வேலை செய்துவருகிறேன். எத்தனை வருடங்களாக காரைக்குடியில் சித்தாள் வேலை பார்த்துவந்தேன் என்றால் சிறுவயதிலிருந்தே பார்த்து வந்தேன். நான் என் ஊரை சுற்றியுள்ள ஊர்களில் சித்தாள் வேலை செய்து வந்தேன் என்றாலும் காரைக்குடியில் மட்டும் சித்தாள் வேலை பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) என் கணவர் பெயர் பாண்டியன். என் கணவர் கொத்தமங்களம் சுற்றியுள்ள ஊர்களில் வேலை பார்த்துவந்தார் என்றால் சரிதான். கொத்தமங்களம் என்பது பெரிய கிராமம். பெரிய கடைகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. கானாடுகாத்தான் எத்தனை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. கானாடுகாத்தான் பேரூராட்சி என்றால் எனக்கு தெரியாது. கொத்தமங்களம் என்பது சிறிய கிராமம் என்றாலும் பொருட்களை வாங்குவதற்கு கானாடுகாத்தானுக்கு வரவேண்டும் என்றால் சரியல்ல. அனைத்து பொருட்களும் எங்கள் ஊரில் கிடைக்கும்.

3) கானாடுகாத்தான் எங்கள் ஊரில் இருந்து 3 கி.மீ தூரம் என்றால் இருக்கலாம் ஆனால் எனக்கு தெரியாது. புகார்தாரர் கானாடுகாத்தான் டு காரைக்குடி பைபாஸ் ரோட்டில் குரு பெயிண்ட் கடை வைத்துள்ளார் என்றால் அவர் யார் என்றே எனக்கு தெரியாது. அந்த கடையில் அவர் கட்டிடத்திற்கு தேவையான பெயிண்ட் மற்றும் இதர பொருட்கள் வைத்து வியாபாரம் செய்து வருகிறார் என்றால் தெரியாது. நானும் என் கணவரும் கொத்தனார்,சித்தாள் வேலைக்கு தேவையான பொருட்கள் பெயிண்ட் போன்ற பொருட்களை வாங்குவீர்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் கொத்தனாராக கூலி வேலைக்குதான் செல்கிறார். நானும் சித்தாளாக கூலி வேலைக்குதான் செல்கிறேன். கூலி வேலைக்கு செல்பவர்கள் கட்டிடத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி செல்ல மாட்டார்கள்.

4) நான் மகளிர் சுய உதவி குழுவில் உறுப்பினர் என்றால் சரிதான். அவ்வாறு மகளிர் குழுவில் வாங்கிய கடன்களை திருப்பி செலுத்துவதற்கு வெளியில் கடன் வாங்கிதான் செலுத்துவேன் என்றால் நான் வெளியில் வார வட்டிக்கு பணம் வாங்கியிருக்கிறேன். புகார்தாரர் எனக்கு நல்ல பழக்கம் என்பதால் என் குடும்ப அவசர தேவை என்று கூறி கடந்த 07.05.2021 ம் தேதி ரூ.2 லட்சம் கடனாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை யார் என்றே எனக்கு தெரியாது. கடன் வாங்கும் போது மாதம் 1% வட்டி செலுத்துவதாகவும், 1 மாதத்தில் திருப்பி செலுத்துவதாகவும் சொல்லி கடன் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரர் மற்றும் ரமேஷ் என்பவர் முன்னிலையில் கடனுக்கு ஆதரவாக மா.சா.ஆ, 1 கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் ம.சா.ஆ. 1 கடனுறுதிசீட்டை கொடுக்கவில்லை சோலை முருகனிடம்தான் கொடுத்திருந்தேன். ம.சா.ஆ. 1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி சோலை முருகனிடம் ரூ.50 ஆயிரம் ரூ.100 க்கு ரூ20/- வார வட்டிக்கு வாங்கியிருந்தேன். அதில் ரூ.30 ஆயிரத்தை கிராம சக்தியில் லோன் எடுத்து கொடுத்துவிட்டேன். பாக்கி தொகையையும், வட்டியையும் செலுத்த சொல்லி கேட்டபோது என்னால் வட்டி செலுத்த முடியாது என்றும் அசல் மட்டும் தருவதாக சொன்னேன். அதற்கு சோலை முருகன் என்னிடம் சண்டை போட்டார் அதன் பிறகு எனக்கு புகார்தாரரிடம் இருந்து சட்ட அறிவிப்பு வந்தது.

5) சோலை முருகனிடம் நான் கடன் வாங்கியதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்தற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் வார வட்டியில் கடன் வாங்கியதால் இது போன்ற ஆதாரம் எதுவும் ஏற்படுத்திக்கொள்வதில்லை. வட்டி மட்டும் செலுத்தினேன். எந்த தேதியில் ரூ.30 ஆயிரத்தை திருப்பி செலுத்தினேன் என்றால் தேதி நினைவில் இல்லை. லோன் எடுத்தவுடன் பணத்தை கொடுத்துவிட்டேன். எந்த தேதியில் ரூ.30 ஆயிரம் லோன் வாங்கினேன் என்றால் தேதி தெரியாது. 3 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கினேன். சோலை முருகனிடம் நான் கடனை திருப்பி செலுத்தியதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. வார வட்டி என்பதால் நான் எதுவும் வாங்காமல் விட்டுவிட்டேன். இதுபோன்று பிரச்சனை வரும் என்றும் நான் எதிர்பார்க்கவில்லை.

6) என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 கடனுறுதிசீட்டு சோலைமுருகனிடம் கொடுத்தது என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் அவர் என்னிடம் கடனுறுதிசீட்டும், காசோலையும் வாங்கியிருக்கிறார். என்னிடம் கையொப்பம் வாங்கும்போது கடனுறுதிசீட்டில் விபரம் எதுவும் பூர்த்தி செய்யப்படவில்லை. சோலை முருகனிடம் கொடுத்த கடனுறுதிசீட்டுதான் ம.சா.ஆ.1 என்று என்னால் உறுதியாக

சொல்லமுடியாது. நான் புகார்தாரரிடம் கடன் வாங்கியபோது அதற்கு ஆதரவாக கையொப்பம் செய்து கடனுறுதிசீட்டை ம.சா.ஆ.1 ஐ கொடுத்தேன் என்றும், தற்போது யாரோ சோலைமுருகனிடம் ம.சா.ஆ. 1 ஐ கொடுத்ததாக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. சோலைமுருகனிடம் தான் கடனுறுதி சீட்டையும் காசோலையையும் கொடுத்தேன்.

7) ம.சா.ஆ. 2 ஆவணம் என்னுடையதுதான். நான் படிக்கவில்லை அதில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. கண்டிப்பாக காசோலை கொடுக்கவேண்டும் என்று சோலை முருகன் கேட்டுக்கொண்டதால் நான் வங்கியில் சென்று காசோலை கேட்டபோது முதலில் எனக்கு கொடுப்பதற்கு மறுத்தார்கள். காசோலையை வாங்கினால் யாரிடமாவது பட்டுக்கொள்வேன் என்று சொன்னார்கள். இருந்தும் நான்தான் காசோலை வேண்டும் என்று வாங்கி சோலைமுருகனிடம் கொடுத்தேன். காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். இவ்வழக்கு காசோலை சோலை முருகனிடம் கொடுத்த காசோலை என்று எதை வைத்து கூறுகிறேன் என்றால் சோலை முருகன் ஒருவரிடம்தான் நான் காசோலையை கொடுத்தேன்.

8)நான் வங்கியில் வாங்கிய காசோலை புத்தகத்தில் எத்தனை காசோலை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சோலைமுருகன் எனது காசோலை புத்தகத்தில் ஒரு காசோலையை கிழித்தபோது அது குறுக்காக கிழிந்துவிட்டதால் அதை என்னிடம் கொடுத்துவிட்டார். அதன்பிறகு வழக்கு காசோலையை கிழித்து எடுத்துக்கொண்டார். மற்ற காசோலைகள்அனைத்தும் அப்படியே என்னிடம் தான் உள்ளது. பாக்கி உள்ள காசோலைகள் அனைத்தும் என்னிடம்தான் உள்ளது என்றால் சரிதான். வேறு யாரிடத்திலும் காசோலை மூலம் வரவு செலவு வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சோலை முருகனிடம் கொடுத்த காசோலை எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9) இவ்வழக்கு காசோலையை இதற்கு முன் பார்த்ததில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும்போதுதான் பார்த்தேன் என்றால் நான் சோலைமுருகனிடம் கொடுத்தபோது பார்த்ததுதான் அதன்பிறகு தற்போதுதான் பார்க்கிறேன். இவ்வழக்கு காசோலை எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காசோலை புத்தகம் எத்தனை வருடங்களுக்கு முன்பு வாங்கியது என்றால் சுமார் 4 வருடம் இருக்கும். காசோலை உள்ள வங்கி கணக்கில் வரவு செலவு செய்கிறேனா என்றால் செய்கிறேன். கடைசியாக 7, 8 மாதங்களுக்கு முன்பு சொசைட்டி லோன் இதே வங்கி கணக்கில் வாங்கியிருக்கிறேன். முதலில் விஜயா பேங்காக இருந்து தற்போது வேறு பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள வங்கி பெயர் எனக்கு

தெரியவில்லை.

10) புகார்தாரரிடம் வாங்கி 2 லட்சம் ரூபாய்க்காகதான் இவ்வழக்கு காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலையை நான் சோலைமுருகனிடம் கொடுக்கும்போது கையொப்பம் மட்டும்தான் செய்து கொடுத்தேன். பூர்த்தி செய்யவில்லை. நான் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக சோலைமுருகனிடம் கொடுத்த காசோலைதான் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையைதான் சொல்கிறேன். புகார்தாரருக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சோலைமுருகனிடன் கொடுத்த காசோலையை திரும்ப கேட்டான என்றால் கேட்டேன். வட்டி பணத்தையும் தந்தால்தான் திரும்ப கொடுப்பதாக சொன்னார். நீதிமன்றத்தில் வைத்து வட்டியை வாங்கிகொள்வதாக சொன்னார். இவ்வாறு செய்வார் என்று நான் எதிர்பார்க்கவீல்லை அதன் பிறகு நோட்டீஸ் அனுப்பிவிட்டார்.

11) சோலை முருகனிடன் கொடுத்த காசோலையை திரும்ப பெறுவதற்கு எனக்கு தெரிந்த நபர்களை வைத்து முயற்சி செய்தேனா என்றால் இல்லை. ஆவணங்களை சோலைமுருகன் திருப்பி தராததால் அவர் மீது காவல் துறையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்க புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சோலைமுருகனுக்கு ஆவணங்களை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. உண்மையில் நான் சோலை முருகனிடம் கடன் இருந்து அதற்காக காசோலையை கொடுத்திருந்தால் அவரே என் மீது நேரடியாக இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றும், புகார்தாரர் மூலமாக வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு இருந்திருக்காது என்றால் சரியல்ல. சோலைமுருகனுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்ற சொன்னால் சரியல்ல. சோலைமுருகனுக்கும் புகார்தாரருக்கும் இவ்வழக்கு தொடர்பாக எந்த சம்பந்தமும் இல்லை என்றால் இருக்கிறது.

12) சோலைமுருகனிடம் கடன் வாங்கியது அதற்காக இவ்வழக்கு ஆவணங்களை கொடுத்ததை நான் நிரூபிக்க கடமைபட்டுள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் அனுப்பிய ம.சா.ஆ. 4 வழக்கறிஞர் அறிவிப்பில் எனது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது Account blocked என்ற காரணம் கூறி திருப்பப்பட்டது என்று கூறி அறிவிப்பு அனுப்பினார் என்றால் அனுப்பினார் நான் அறிவிப்பை பெற்றுக் கொண்டேன். ஒன்று சோலைமுருகனிடம் இருந்தும், மற்றொன்று புகார்தாரரிடம் இருந்தும் வந்தது ஆனால் அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ. 5 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

13) மேற்படி அறிவிப்பில் உள்ள விபரங்களை என் கணவர் மூலம் தெரிந்துகொண்டேன். நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால்

அனுப்பினேன். அந்த பதில் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தெரியவில்லை. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் இருந்தால் தாக்கல் செய்கிறேன். நான் புகார்தாரரிடம் வாங்கிய கடன் உண்மை என்றும், Account block செய்யப்பட்ட காசோலையை புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் கொடுத்து ஏமாற்றி இருக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரை ஏமாற்றியதற்காக நான் தண்டிக்கப்படவேண்டியவர் என்றால் சரியல்ல. புகார்தாரார்தான் என்னை ஏமாற்றிவிட்டார். காசோலை தொகையை நான் திருப்பி செலுத்த நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.